1987 மே 11]

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.'' (குறுக்கீடுகள்.)

திரு. அ. ரகுமான்கான் : இதை அப்போஸ் பண்ணுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டெலிபரேஷன் வரும் போது பேசலாம். I will record your objections.

திரு. அ. ரகுமான்கான்: சட்டமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர், அமைச்சர்கள், பேரவைத் தலைவர், துணைத் தலைவர் இவர்கள் நடத்தை பற்றி விமர்சனங்களை, திரைப் படங்களில்... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏன் அவசரப்படுகிறீர்கள்? இது வேறு பில். இது வணிக வரித்துறை.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஈ) தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS